16.03.2026

OS. No. 69 / 2021

**DW.1 – ராஜ்குமார்**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :–**

வாதிகள் தாக்கல் செய்துள்ளது பாக வழக்கு என்றால் சரிதான். என் தகப்பனார் தாவா சொத்து குறித்து எனக்கு ஒரு செட்டில்மென்ட் எழுதிவைத்துள்ளார். அதனால், பாகபிரிவினை கோர முடியாது என்று வழக்கு நடத்துகிறேன் என்றால் சரிதான். அந்த செட்டில்மென்ட் ஆவணம் 1991-ஆம் ஆண்டு ஆவணம். அந்த ஆவணத்திலுள்ள சரத்துகள் சரியானவை என்றால் சரிதான். சொத்து விவரத்திலுள்ள சொத்து காலிமனை என்று செட்டில்மென்ட் ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த தாவா சொத்து செட்டில்மென்ட் மூலம் எனக்கு கிடைத்த பிறகுதான் அதில் இரண்டு மாடி கட்டிடம் கட்டினேன் என்பதுதான் என் வழக்கு என்றால் சரிதான். பஞ்சாயத்தில் அனுமதி பெற்றுதான் கட்டிடம் கட்டினேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெற்ற ஆவணம் என்றால், எனக்கு ஞாபகமில்லை. சாட்சி மீண்டும் அந்த ஆவணத்தை பார்த்துவிட்டு தான் கட்டிடம் கட்டுவதற்கு வாங்கிய ஆவணம்தான் என்கிறார், அது வா.சா.ஆ.12. உத்தேசிக்கப்பட்டுள்ள கூடுதல் கட்டிடம் என்று அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணத்தில் கட்டிட அனுமதி 1989-இல் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அந்த ../

ஆவணத்தில் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. 1989-இல் அந்த சொத்தின் உரிமையாளர் இல்லை என்றால் சரிதான். 1989, 1990-இல் என் தகப்பனார் வேலையில் இருந்தார் என்றால் சரிதான், 1991-இல் ஓய்வு பெற்றார். என் தகப்பனார் தொடக்க பள்ளி ஆசிரியராக ஒரு அரசு உதவிபெறும் பள்ளியில் பணியாற்றியதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால், என் தகப்பனார் திருச்சி செயிண்ட் ஜோசப் பள்ளியில் வேலை செய்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் பழைய 11-ஆம் வகுப்பிற்கு பாடம் எடுத்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. அவர் உதவி தலைமை ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றார் என்றால், ஓய்வு பெறும்பொழுது பணியாற்றினார். 1990-ஆம் ஆண்டே தாவா சொத்தில் வீடு கட்ட ஆரம்பித்து அதற்கு என் தகப்பனாரின் ஓய்வூதிய பலன்கள் அனைத்தும் செலவு செய்யப்பட்டது என்றால், பின்னர் முதல் மாடி கட்டுவதற்கு கடன் வாங்க முயற்சித்தபோது, என் தகப்பனார் ஓய்வு பெற்றவர் என்பதால் அவர் பெயரில் கடன் வாங்க இயலாது என்ற காரணத்தினால், என் பெயரில் அந்த தான செட்டில்மென்ட் பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல, அந்த சமயத்தில் நான் டைட்டன் கம்பெனியில் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். என் பெயரில் கடன் வாங்குவதற்காக இந்த செட்டில்மென்ட் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. என் தகப்பனார் ஓய்வுபெறும்பொழுது ஒரு சகோதரிக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அந்த திருமணம் செய்து வைத்த காரணத்தினால் என் தகப்பனாரிடம் பணம் இல்லாமல் போனது என்றாலும், அதேபோல் அவர் வீடு கட்டுவதற்கு வங்கி கடன் பெற இயலாத காரணத்தினாலும், அந்த../

சொத்தை என் பெயரில் எழுதி வைத்து என் மூலமாக கடன் வாங்கி வீட்டைக் கட்டினார் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனாருக்கு ஆறு பிள்ளைகள். அவர்கள் ஆறு பேர் மீதும் என் தகப்பனாருக்கு பாசம் உண்டு என்றால் சரிதான். என்மீது அதீதமான பாசத்தின் காரணமாக அந்த தானசெட்டில்மென்ட் எழுதிவைத்ததாக செட்டில்மென்ட் ஆவணத்தில் என் தகப்பனார் சொல்லியுள்ளார் என்றால், அதீத பாசத்தினாலும், அவற்றிற்கு தேவையானவற்றை நான் மட்டுமே செய்து வருவதாலும் எழுதி வைத்தார். செட்டில்மென்ட் எழுதிவைத்த காலத்தில் நான் வேலைக்கு சென்றுவிட்டேன் என்றாலும், வாதி படித்துக்கொண்டிருந்தார் என்றாலும் சரிதான். படித்துக்கொண்டிருந்ததால் அவர் அவருடைய தகப்பனார் தயவில்தான் வாழ்ந்தார் என்றால் சரிதான். வாதிக்கு என் தகப்பனார் எந்த செட்டில்மென்ட் ஆவணமும் எழுதிவைக்கவில்லை. வாதிக்கு என் தகப்பனார் சொத்து எதுவும் எழுதி கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. எல்.ஐ.சி-யில் தான் கடன் வாங்கினோம். என் தகப்பனாருக்கு ஓய்வூதிய கணக்கு பேங்க் ஆப் மதுராவில்தான் இருந்தது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. அதன்பிறகு, செயின்ட் ஜோசப் பள்ளியினுடைய கணக்குகள் கனரா வங்கிக்கு மாற்றப்பட்டதா என்றால், அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. என் தகப்பனாருக்கு நான் வங்கி கடன் தொகையை கொடுத்து அவர்தான் அந்த கடனை அடைத்துவந்தார் என்று சொல்வதற்கு, ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்கு சம்பந்தமானதுதான் என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ரசீதுகள் என்றால் சரிதான். அதிலுள்ள விவரங்கள் சரியானதுதான். வங்கி கடன் என் பெயரில் வாங்கியிருந்தாலும், அந்த ../

தவணைத் தொகையை என் தகப்பனார் தன்னுடைய ஓய்வூதிய கணக்கிலிருந்து நேரடியாக எல்.ஐ.சிக்கு செலுத்தி வந்தார் என்றால் சரியல்ல. அந்த வங்கி கடன் 2009-ஆம் ஆண்டு தீர்க்கப்பட்டது. பின்னிட்டு, இந்த சொத்தை வங்கியில் வைத்து என் மகனின் படிப்பிற்காக கடன் வாங்கினேன் என்றால் சரிதான். இந்த காலக்கட்டத்தில் என் தகப்பனார் உயிரோடு இருந்தார் என்றால் சரிதான். என் மகனுக்கு வங்கிக்கடன் பெறுவதற்காகத்தான் அவர் வாங்கிய கடன் அடைப்பட்ட பிறகும், என் பெயரில் உள்ள செட்டில்மென்ட் ஆவணத்தை ரத்து செய்யாமல் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. என் தகப்பனார் 2019-ஆம் ஆண்டு இறந்த பிறகு, வாதி என்னிடம் பாகம் கேட்டார் என்றாலும், என் பெயரில் செட்டில்மென்ட் ஆவணம் இருப்பதால், நான் பாகம் பிரித்துத்தர மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3, 4 பதிவு செய்யப்படாத ஆவணங்கள் இல்லை என்பதால், அது சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. சொத்து என் பெயரில் இருந்ததால்தான் பி.வா.சா.ஆ.2 ஒப்பந்தம் பக்கத்து வீட்டுக்காரருடன் போடப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி வீடு கட்டிய காலத்தில் இருந்து தொடர்ந்து குடியிருந்து வருகிறார் என்றாலும், வழக்கிற்காக நான் அவர் ஆரம்பத்தில் ஒத்திக்கு குடியிருந்து 2015-ஆம் ஆண்டு வீட்டை காலி செய்து வெளியே சென்றுவிட்டு, மீண்டும் 2020-ஆம் ஆண்டுதான் தாவா சொத்தில் என்னுடைய அனுமதி பெயரில் குடியிருந்து வருகிறார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு 2015-ஆம் ஆண்டு வீட்டை காலி செய்துவிட்டு, மீண்டும் 2020-ஆம் ஆண்டுதான் தாவா சொத்திற்கு வந்தார் என்பதற்கு இடைப்பட்ட காலத்தில் அவர் எங்கிருந்தார் ../

என்பதற்கு என்னிடம் ஆவணம் இல்லை என்றால் சரிதான். என் தகப்பனாரின் சொந்த ஊரான நெய்குணம் என்ற கிராமத்தில் ஐந்தரை ஏக்கர் நிலம் இருந்தது என்றாலும், அதில் வருடத்திற்கு 200 மூட்டை நெல் விளையும் என்றால் ஐந்தரை ஏக்கர் நிலம் இருந்தது, ஆனால் 200 மூட்டை விளையுமா என்று எனக்கு தெரியாது. எனக்கு விவசாயத்தைப் பற்றி எதுவும் தெரியாது என்றால், நான் படித்துக்கொண்டிருந்ததால் எனக்கு தெரியாது. நான் விவசாயத்தை நேரடியாக பார்க்கவில்லை, குத்தகைவிட்டு பார்த்தேன். அந்த நிலத்தை விற்றுதான் என் கடைசி தங்கைக்கு என் தகப்பனார் திருமணம் செய்து வைத்தார் என்றாலும், நான் எந்தவொரு பொருளுதவியும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. என்னால் இந்த குடும்பம் எந்த பயனும் அடையவில்லை என்றால் சரியல்ல. நான் எதிர்கோரிக்கையுடன்தான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சுவாதீனம் கேட்ட பரிகாரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எந்தவொரு காலத்திலும் வாதி என்னுடைய அனுமதியின்பேரில் அந்த வீட்டில் குடியிருந்ததில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை :**</u> இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.03.16 18:20:26 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.